## இன்றைய வேளாண் செய்திகள்

### குமரியில் ஆப்பிள் விலையை விஞ்சிய கொய்யா

கன்னியாகுமரியில் கொய்யாப் பழத்தின் விலையைவிட, ஆப்பிள் பழத்தின் விலை குறைவாக உள்ளதால் ஆப்பிள் பழங்களை மக்கள் விரும்பி வாங்கிச் செல் கின்றனர். குமரி மாவட்டத்துக்கு அண்மைக்காலமாக ஆந்திர மாநில கொய்யாப் பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் தள்ளுவண்டிகளில் கொய்யாப் பழங்களை குவித்து வைத்து வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். இவை கிலோ ரூ. 80-க்கு விற்பனை செய்யப் படுகிறது. அதே நேரத்தில் அமெரி ஆப்பிள் என அழைக்கப்படும் சிறிய ரக ஆப்பிள் வருகையும் அதிகரித்துள்ளது. இந்த ஆப்பிள் பழங்கள் தமிழகத்தின் கொடைக்கானல் மற்றும் ஊட்டி போன்ற மலைப்பிரதேசங்களில் அதிகமாக விளைச்சலாகி வருவதால் இந்த ரக ஆப்பிள் பழங்களின் வருகையும் அதிகரித் துள்ளது. இதன் விலை கிலோ ரூ. 60 ஆக உள்ளது. கொய்யாப் பழத்தின் விலையைவிட ஆப்பிள் பழத்தின் விலை குறைவாக உள்ளதால் அமெரி ரக ஆப்பிள் விற்பனை அதிகரித்துள்ளதாக கடை வியாபாரிகள் தெரிவித்தனர்.

### கானாவில் யூரியா உர ஆலை: திட்டத்தைப் புதுப்பிக்க இந்தியா-கானா முடிவு



மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் யூரியா உர ஆலை அமைப்பது தொடர்பான திட்டத்தை மறு ஆய்வு செய்ய இந்தியாவும் கானாவும் முடிவு செய்துள்ளன. இரு நாடுகளின் கூட்டு முயற்சியில் இந்த ஆலை அமைக்கப்படும்

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 2010ஆம் ஆண்டில் மேற்கொண்ட முயற்சி நிறைவேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் இயற்கை எரிவாயு அதிக அளவில் கிடைக்கிறது. இந்த இயற்கை வாயுவை யூரியா ஆலைக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுபோல, எந்தெந்த நாடுகளில் இயற்கை எரிவாயு அதிகம் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் உர ஆலைகளை அமைப்பது தொடர்பாக பரிசீலித்து வருகிறோம் என்றும் மத்திய உரத் துறை அமைச்சரான ஆனந்த்குமார் பி.டி.ஐ. செய்தி யாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். கானாவில் யூரியா உர ஆலை அமைப்பது தொடர்பாக அந்த நாட்டின் தூதரக அதிகாரியான சாமுவேல் பனியின் யாலி மத்திய உரத் துறை அமைச்சரை அண்மையில் சந்தித்து விவாதித்துள்ளார். ஓமன் நாட்டில் ஓமிபிஃக்கோவுடன் இணைந்து கூட்டு முயற்சியில் உர ஆலை அமைக்க நடவடிக்கை எடுத்ததுபோல, கானாவிலும் இத்தகைய ஆலை அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம் என்றும் ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். நாட்டில் யூரியா உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## <u>குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கத்தரிக்காய்</u>

குறைந்த செலவில் அதிக லாபம் தரும் தோட்டப் பயிரான கத்தரிக்காயை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்து வருகின்றனர். திருத்தணி ஒன்றியத்திலுள்ள வேலஞ்சேரி, முருக்கம்பட்டு, செருக்கனூ்ர், கே.ஜி.கண்டிகை, தரணிவராகபுரம், மத்தூ்ர் உள்பட 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் தோட்டப் பயிரான, கத்தரிக்காய் பயிரை ஆயிரத்துக்க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். மற்ற காய்கறிப் பயிர்களை விட குறைந்த செலவில் அதிக லாபம் தருவது கத்தரிக்காய். ஒரு ஏக்கர் நிலத்தில் கத்தரிக்காய் தோட்டம் (பயிர்) அமைத்தால், அதற்கு ஆகும் செலவு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் மட்டுமே.

ஆனால், இந்த பயிரில், 120 நாள்களில் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது.மேலும், உஜ்லா கத்தரிக்காய்க்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால், அதிகளவில் விவசாயிகள் அதை பயிர் செய்கின்றனர்.

இதுகுறித்து தரணிவராகபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குப்பன் கூறியது: நான் கடந்த மூன்று ஆண்டுகளாக கத்தரிக்காய் தோட்டம் அமைத்து வருகிறேன். தற்போதும், ஒரு ஏக்கரில் உஜ்லா கத்தரிக்காய் அமைத்துள்ளேன். இதற்கு 4 முறை களை எடுத்து 3 முறை பூச்சி மருந்து இயந்திரம் மூலம் மருந்து தெளித்தேன்.

தற்போது, ஒரு நாளைக்கு 75 முதல் 100 கிலோ வரை கத்தரிக்காய்கள் கிடைக்கின்றன. இதை திருத்தணி காய்கறி மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.25 வரை விற்பனை செய்து வருகிறேன். எனக்கு அதிக லாபம் தருவதால், தொடர்ந்து கத்தரிக்காய் பயிரிட்டு வருகிறேன் என்றார் அவர்.

## வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள், நெறிமுறைகள் குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்துக்கு உள்பட்ட நெடியம் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் சின்னசாமி, நெடியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க தலைவர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாண்மை இயக்குநர் ரவி வரவேற்றார். தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை சங்கங்களில் பெற்ற பயிர்க்கடன் தொகையை தவணைத் தேதிக்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறுதொழில் செய்ய வட்டியில்லா கடன் வழங்குதல், மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கு சேமிப்பின் அடிப்படையில் கடன் வசதி, டாப் செட்கோ கடன் தானிய ஈட்டுக்கடன் போன்ற பல்வேறு கடன் திட்டங்கள் குறித்தும் பயிற்சி முகாமில் விளக்கிக் கூறப்பட்டது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் துணைத் தலைவர் கோபி, ஒன்றிய இயக்குநர் சந்திரன், கூட்டுறவு சார் பதிவாளர்கள் பொற்கைபாண்டியன், பாஸ்கரநாயுடு உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். சங்கத்தின் செயலாளர் லோகநாதன் நன்றி கூறினார்.

## சோலையாறில் 117 மி.மீ. மழை

சோலையாறு அணைப் பகுதியில் திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 117 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): பரம்பிக்குளம் 83, ஆழியாறு 5.4, திருமூர்த்தி 3, அப்பர் நீராறு 78, லோயர் நீராறு 82, வால்பாறை பி.ஏ.பி. 53, மாக்கினாம்பட்டி 36, மணக்கடவு 38.5, சர்க்கார்பதி 16, தூணக்கடவு

78, பெருவாரிப்பள்ளம் 81, நெகமம் 18, காடம்பாறை 35, நவமலை 5.4, வேட்டைக்காரன்புதூர் 11, நல்லூர் 10, அப்பர் ஆழியாறு 5.

## 3.48 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

நாமக்கல் மாவட்டத்தில் 3 லட்சத்து 48 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். நாமக்கல் மாவட்டம், ஆவல்நாயக்கன்பட்டி ஊராட்சி, குமரகவுண்டம்பட்டியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடக்கிவைத்து அவர் பேசியது: நாமக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் 1-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை 21 நாள்களுக்கு நடைபெற உள்ளன. கால்நடைகளுக்கு ஏற்படும் மிகக் கொடிய நோய்களில் ஒன்றான கோமாரி நோயின் தாக்கத்தை முற்றிலும் ஒழிக்க தமிழக அரசு ஆண்டுக்கு இரண்டு முறை மார்ச், செப்டம்பர் மாதங்களில் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை நடத்த உத்திரவிட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் 3 லட்சத்து 48 ஆயிரம் கால்நடைகள் கணக்கெடுக்கப்பட்டு அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி 100 சதம் போடப்பட்டது. அதேபோல, தற்போது இரண்டாவது கட்டமாக கோமாரி நோய் தடுப்பூசி ஏற்கெனவே கணக்கெடுக்கப் பட்ட 3 லட்சத்து 48 ஆயிரம் கால்நடைகளுக்கு 100 சதம் தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காக 96 கால்நடை மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு தேவையான மருந்துகள், தடுப்பூசிகள் தயார் நிலையில் உள்ளன. இந்த முகாம் நடைபெறும் நாள் குறித்து அனைத்து ஊராட்சிகளிலும் தண்டோரா, ஒலிப் பெருக்கிகள் மூலம் விளம்பரப் படுத்தப்படும். இத்துடன் துண்டுப் பிரசுரங்கள், விளம்பரத் தட்டிகள் ஆகியவை மூலமும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்போர் தங்களது கால்நடைகளைத் தடுப்பூசி முகாம்களுக்கு அழைத்து வந்து பயன் பெற வேண்டும் என்றார். இதில், கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இயக்குநர் மருத்துவர் சக்திவேல், நாமக்கல் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கவிதாசந்திரன், உதவி இயக்குநர்கள், கால்நடை மருத்துவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருச்செங் கோட்டில்...: திருச்செங்கோடு அருகே எஸ்.இறயமங்கலம் கொளத்துப் பாளையத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், திங்கள்கிழமை

நடைபெற்ற முகாமை, திருச்செங்கோடு வருவாய்க் கோட்டாட்சியர் செங்கோட்டையன் தொடக்கிவைத்தார். வரும் 21-ஆம் தேதி வரை அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளன. மண்டல இயக்குநர் சக்திவேல் வழிகாட்டுதலின்படி, முகாம்களில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடும் வகையில், 8 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் மோகன் ராஜ், சிறப்பு மருத்துவர் பாஸ்கர், உதவி மருத்துவர்கள் கலந்து கொண்டனர். எஸ்.இறையமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் ராமசாமி நன்றி கூறினார். விவசாயிகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி அட்டைகள் வழங்கப்பட்டன.

**<u>3.65 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடத் திட்டம் : கிருஷ்ணகிரி ஆட்சியர் தகவல்</u>**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3.65 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படும் என, மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய கால், வாய் கோமாரி நோய்த் தடுப்பூசி திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கான இலவச முகாமை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். கிருஷ்ணகிரியை அடுத்த சின்னமுத்தூர் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் பேசியது:

விவசாயிகளின் பொருளாதாரத்துக்கு உதவும் கால்நடைகளை நோய்கள் தாக்காமல் இருக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்நடைகளுக்கான கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்று வருகிறது. வரும் 21-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த முகாம் மூலம் 3.65 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும். எனவே, விவசாயிகள் தங்களது கால்நடைகளை முகாமிற்கு அழைத்து வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்றார். கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் கந்தசாமி, துணை இயக்குநர் வேடியப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன் சேகர், சுண்டே குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் சக்தி சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>விவசாயிகளுக்கு 50% மானியத்தில் வேளாண் இடுபொருட்கள்</u>**

அரியலூரில் திங்கள்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில் நலத் திட்ட உதவிகளை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வழங்கினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில்

ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, காவல் துறை நடவடிக்கை வேண்டி, பசுமை வீடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆட்சியர், அவற்றின் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும், வேளாண்மைத் துறையின் சார்பில், 9 பேருக்கு தலா ரூ. 1,567 மதிப்பிலான வேளாண் இடுபொருட்களை 50% மானியத்தில் ஆட்சியர் வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயகமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கோமாரி தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 7ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி திங்கள்கிழமை தொடங்கியது. இப் பணியை மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பிருந்தாதேவி தொடங்கி வைத்தார். விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் செப்டம்பர் 1ஆம் தேதி முதல் செப்டம்பர் 21ஆம் தேதி முடிய 21 நாள்கள் ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைகளுக்கு 100 சதவீத கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது. கோலியனூரில் நடைபெற்ற இம் முகாமில் 400-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 6,71,569 கால்நடைகளுக்கு 21 நாள்களில் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், அனைத்து கால்நடை வளர்ப்போரும், தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள ஏதுவாக அந்தந்த கிராம ஊராட்சி தலைவர்கள், தண்டோரா வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்க வேண்டும் என்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பிருந்தாதேவி தெரிவித்துள்ளார். இந் நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி.அப்சல், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் வேங்கடபதி, கால்நடை நோய் புலனாய்வுப்பிரிவு உதவி இயக்குநர் கி.மகேந்திரன், விழுப்புரம் கோட்ட உதவி இயக்குநர் பி.சுந்தர்ராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

திருக்கோவிலூர்

திருக்கோவிலூர் அருகே கொங்கனாமூர் கிராமத்தில் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. மணலூர்பேட்டை அரிமா சங்கம், மணலூர்பேட்டை கால்நடை மருத்துவமனை ஆகியவை இணைந்து முகாமை 7}வது முறையாக நடத்தின. ஊராட்சித் தலைவர் அ.கருணாகரன் தலைமை வகித்தார். அரிமா சங்க ஆலோசகர் எஸ்.குழந்தைவேலு முன்னிலை வகித்தார்.

கால்நடை மருத்துவர் நரேந்திரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் 245 மாடுகள் மற்றும் 130 ஆடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டனர்.

**<u>தோட்டக்கலை விவசாயி விருதுக்கு விண்ணப்பிக்கலாம்</u>**

தோட்டக்கலை விவசாயி விருதுக்கு பெங்களூரு விவசாய அறிவியல் பல்கலைக்கழகம் விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. இதுகுறித்து பெங்களூரு விவசாய அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாநில அளவிலான டாக்டர்.எம்.எச்.மரி கௌடா சிறந்த தோட்டக்கலை விவசாயி விருது, சி.பைரே கௌடா சிறந்த விவசாயி விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த விருதுகள் நிகழாண்டில் நடைபெறும் விவசாயக் கண்காட்சியில் வழங்கப்படும். விருதுக்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாயத் துறை இணை இயக்குநர்கள், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர்கள் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை ஜ்ஜ்ஜ்.ன்ஹள்க்ஷஹய்ஞ்ஹப்ர்ழ்ங்.ங்க்ன்.ண்ய் என்ற இணையதளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அக்டோபர் 10-ஆம் தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 080-23418883 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் நீர் மட்டம் 103 அடி</u>**

சேலம்: மேட்டூர் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 103.37 அடியாக இருந்தது. அணைக்கு. வினாடிக்கு 6125 கனஅடி நீர் வருகிறது. அணையில் இருந்து 17,800 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

**<u>யூரியா இறக்குமதி 20 லட்சம் டன்னாக சரிவு</u>**



புதுடில்லி: நடப்பு 2014 – 15ம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத காலத்தில் (ஏப்.,– ஆக.,), நாட்டின் யூரியா இறக்குமதி, 54 சதவீதம் சரிவடைந்து, 20.31 லட்சம் டன்னாக குறைந்து உள்ளது.இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில், 31.27 லட்சம் டன்னாக உயர்ந்து காணப்பட்டது என, மத்திய உர அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பருவமழை பொழிவு சராசரிக்கும் குறைவாக இருந்ததால், கடந்தாண்டை விட, நடப்பாண்டில் பயிரிடும் பரப்பளவு குறைந்து உள்ளது. இதன் காரணமாகவே, யூரியா இறக்குமதி, 50 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்துள்ளது என, உர அமைச்சகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தியாவின் யூரியா தேவை, ஆண்டுக்கு, 3 கோடி டன்னாக உள்ளது. இதில், உள்நாட்டில், 2.20 கோடி டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.எஞ்சியுள்ள தேவை, இறக்குமதி வாயிலாக பூர்த்தி செய்து கொள்ளப்படுகிறது.உள்நாட்டில், யூரியா இறக்குமதியில், இந்தியன் பொட்டாஷ், எம்.எம்.டி.சி., மற்றும் எஸ்.டி.சி ஆகிய மூன்று நிறுவனங்கள் ஈடுபட்டு

வருகின்றன.கையிருப்பு அதிகமாக இருந்ததால், சென்ற 2013 – 14ம் நிதியாண்டில், இந்தியாவின் யூரியா இறக்குமதி, 12 சதவீதம் சரிவடைந்து, 70.80 லட்சம் டன்னாக குறைந்தது. இது, முந்தைய 2012 – 13ம் நிதியாண்டில், 80.40 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது.

## வனரோஜா கோழி குஞ்சு அமோக விற்பனை

உத்திரமேரூர் : வனரோஜா கோழி வகை குஞ்சுகள், கிராமப் புறங்களில் கோழி பராமரிப்பாளர்கள் இடையே விரும்பி வாங்கி வளர்க்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் அதிக அளவிலான நாட்டு கோழிகள் வளர்க்கப்படுவதே வழக்கம். சமீப காலங்களில், கறிக்கோழி வகை, கிரிராஜா என, அழைக்கப் படுகின்ற பொந்தாங்கோழி வகைகள் மற்றும் வான் கோழி, ஜீன் கோழி போன்ற வகை கோழிகளும் கிராமப்புறங்களில் விரும்பி வளர்க்கப்படுகின்றன. தற்போது, உத்திரமேரூர் மற்றும் அதை சுற்றிலும் உள்ள கிராமப் பகுதிகளில் வனரோஜா என்கிற கோழி குஞ்சுகள், கோழி பராமரிப்பாளர்களால் விரும்பி வளர்க்கப் படுகிறது. இவ்வகையான கோழி குஞ்சுகள் குறித்து, பண்ருட்டி பகுதியைச் சேர்ந்த கோழி விற்பனையாளர் ராமகிருஷ்ணன் கூறுகையில், "வனரோஜா வகை கோழிகள் தலை, கழுத்து பகுதிகளில் கருப்பு நிறத்திலும், உடல் பகுதி முழுவதும் ஆரஞ்சு நிறத்திலும் உள்ளதால் அது கிராமப்புற கோழி வளர்ப்பாளர்களை மிகவும் கவர்ந்துள்ளது. ஆந்திரா மற்றும் சித்துார் பகுதிகளில் இருந்து, 1 கோழி குஞ்சு 6 ரூபாய்க்கு வாங்கி வந்து, இப்பகுதிகளில், 4 கோழி குஞ்சுகள் 50 ரூபாய்க்கு விற்கிறோம். இக்கோழி குஞ்சுகள் மூன்று மாதங்களில் முட்டையிட துவங்கி, மாதத்திற்கு 20ல் இருந்து 25 முட்டைகள் வரை போடும். 6 மாதங்களில் 4 கிலோ எடை வரை இக்கோழிகள் வளர்கின்றன. இதனால், மற்ற கோழி வகைகளை விட, வனரோஜா கோழி வகைகளை கிராமவாசிகள் விரும்பி வாங்குகின்றனர்," என்றார்.

## மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி முகாம்

உத்திரமேரூர் : காஞ்சிபுரம் மாவட்ட கிராமங்களில், நேற்று மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. கோமாரி நோயை கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மாடுகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும், இத்திட்டத்தின் 7வது சுற்று நேற்று (செப்.1) துவங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, உத்திரமேரூர் ஒன்றியத்தில், அம்மையப்பநல்லூர், வயலூர், பழவேரி, அரும்புலியூர், ஒழலூர் ஆகிய ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு நேற்று தடுப்பூசி போடப்பட்டது. மேலும், வரும் 21ம் தேதி வரை தடுப்பூசி போடப்பட உள்ளது. இதேபோல், சுங்குவார்சத்திரம் அடுத்துள்ள சோகண்டியில், 450 மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டது.

**<u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் பணி துவக்கம்</u>**

திருத்தணி : கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்த, நேற்று முதல், கோமாரி தடுப்பு ஊசி போடும் பணி துவங்கியது. வரும் 21ம் தேதி வரை, சிறப்பு குழு மூலம், கிராமங்கள் தோறும் சென்று சிகிச்சை அளிக்கப்படுகிறது. திருத்தணி கோட்டத்தில், 19வது கால்நடை கணக்கெடுப்பின்படி, 84 ஆயிரம் மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு, ஆண்டுக்கு இரு முறை, கோமாரி தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.நேற்று, கோமாரி தடுப்பு ஊசி போடும் பணி துவங்கியது. திருத்தணி நகராட்சிக்குட்பட்ட டி.புதுார் கிராமத்தில், துவங்கியது. திருத்தணி கால்நடை மருந்தக மருத்துவர் தாமோதரன், மாடுகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி போடும் பணியை துவக்கி வைத்தார். திருத்தணி கோட்டத்தில், வரும் 21ம் தேதி வரை, தினமும் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்படுகிறது. இதுகுறித்து, திருத்தணி கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லத்துரை கூறியதாவது: கோட்டத்தில், 25 மருத்துவ குழு அமைத்து கிராமங்கள் தோறும் நேரில் சென்று தடுப்பு ஊசி போடப்இதுதவிர, கால்நடை உள்ளவர்களுக்கு தடுப்பு

ஊசி போடுவதற்கான அட்டையும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, துண்டு பிரசுரம் வினியோகம் செய்து வருகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

### கால்நடைகளுக்கு மருத்துவ முகாம்

திருவெண்ணெய்நல்லூர்; திருவெண்ணெய்நல்லூர் அடுத்த காந்திக்குப்பத்தில் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடந்தது. பேரூராட்சி தலைவர் வெற்றிவேலன் முகாமை துவக்கி வைத்தார். டாக்டர் ராஜேஷ் தலைமையிலான குழுவினர் 500 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். இருவேல்பட்டு, ஆனத்தூர், டி.எடையார், இளந்துரை ஊர்களிலும் முகாம் நடத்தப்பட்டது. கால்நடை பராமரிப்பு மேற்பார்வை யாளர் நவக்குமார், டாக்டர்கள் தியாகேஸ்வரன், ரதி, கனகராஜ், சங்கையா கலந்து கொண்டனர்.

### துவக்கம்! : கோமாரி நோய் தடுப்பூசி முகாம்... : 3.70 லட்சம் டோஸ் மருந்து தயார்

கோபிசெட்டிபாளையம்: கோபி கோட்டத்துக்கு உட்பட்ட, நான்கு தாலுகாவில் உள்ள கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி முகாம், நேற்று முதல் துவங்கி உள்ளது. கிராமப்புற வளர்ச்சி, விவசாயிகளின் கூடுதல் வருவாய் கால்நடைகளை நம்பியே உள்ளது. கால்நடை வளர்ப்பில், கோமாரி நோய் என்பது விவசாயி களுக்கு பெரும் சவாலாக உள்ளது. மழைக்காலம் துவங்கினால், கால்நடைகளுக்கு வாய் கோமாரி நோய் தாக்கம் (எஃப்.எம்.டி.,) அதிகரிக்கும். கலப்பின மாடுகளை, கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும். இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பு தடைபடும். எருதுகளின் வேலைத்திறன் குறையும். இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். பருவநிலை மாற்றத்தால், தமிழகம் முழுவதும் ஆங்காங்கே பரவலாக மழை பொழித்து வருகிறது. மழைக்காலத்தில், கறவை மாடுகளுக்கு, கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மாவட்டம் வாரியாக லட்சக்கணக்கில் தடுப்பூசி அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 14 யூனியனுக்கும், மொத்தம், மூன்று லட்சத்து, 70 ஆயிரத்து, 50

தடுப்பூசிகள், கால்நடை பராமரிப்பு துறையால் அனுப்பப்பட்டுள்ளது. இந்த மருந்துகள் அனைத்தும், ஈரோடு கால்நடை பராமரிப்பு துறையின், நோய் புலனாய்வு பிரிவில் உள்ள குளிரூட்டியில் வைத்து, அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் அனுப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும், பஞ்சாயத்துக்கள் வாரியாக, நேற்று முதல் கோமாரி நோய் தடுப்பு முகாம் துவங்கி, 21 நாட்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுகிறது. அதன்படி, கோபி கோட்டத்துக்கு உட்பட்ட, கோபி, அந்தியூர், பவானி, சத்தியமங்கலம் ஆகிய தாலுகாவுக்கு மொத்தம், இரண்டு லட்சத்து, 39 ஆயிரத்து, 700 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இந்த தாலுகாவில், மொத்தம், 76 குழுவினர், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட முடுக்கிவிடப்பட்டுள்ளனர். அதன்படி, கோபி அருகே கடுக்காம்பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட, குட்டியாக்கவுண்டன்புதூரில், கோமாரி நோய் தடுப்பு முகாம், நேற்று நடந்தது. முகாமில், கோபி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் மணிசேகரன், கால்நடை மருத்துவர்கள் குழந்தைவேல், கவுதமன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>**

சத்தியமங்கலம்: தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில், சகதி, 15 அடி கழித்து, மொத்த நீர்மட்டம், 105 அடியாகும். மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., இந்த அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலம் பயன்பெறுகிறது. கடந்த சில மாதங்களாக, அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்தது. இதனால், குடிநீர் தட்டுப்பாடு அச்சம் ஏற்பட்டது. அணையின் நீர்மட்டம் குறைந்ததால், மீன் பிடிப்பு தொழில் மற்றும் நீர் மின் உற்பத்தி உள்ளிட்டவை பாதித்தது. இந்நிலையில், கடந்த மாத துவக்கத்தில், பவானிசாகர் அணை நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், தென்மேற்கு பருவமழை துவங்கியதால், அணையின் நீர்வள ஆதாரமான, பவானி ஆறு மற்றும்

மோயாற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து. அணையின் நீர்மட்டம், 76 அடியை தொட்டதால், கடந்த ஆகஸ்ட், 15ம் தேதி, பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக, தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து, அணையின் நீர்பிடிப்பு பகுதியில், மழை குறைந்ததால், அணைக்கு வரும் தண்ணீர் அளவும் குறைந்தது. நேற்று முன்தினம் காலை, எட்டு மணியளவில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 73.71 அடியாக இருந்தது. நேற்று காலை முதல், அணைக்கு வரும் தண்ணீர் அளவு, வினாடிக்கு, 4,000 முதல், 6,000 கன அடியாக அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர துவங்கியது.

## நீலகிரியில் கொட்டி தீர்த்த கன மழை! இரு நாட்களில் 1000 மி.மீ., பதிவு; 'மிஸ்ட் லைட்' வெளிச்சத்தில் இயங்கும் வாகனங்கள்

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில், பரவலாக மழை பெய்து வருகிறது; கடந்த இரு நாட்களில் மட்டும், 1,000 மி.மீ., மழை கொட்டி தீர்த்தது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கூடலுார், பந்தலுார், குந்தா பகுதிகளில் கடந்த சில நாட்களாக, பரவலாக பெய்து வருகிறது. குறிப்பாக, கடந்த 5 நாட்களாக இப்பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், அவலாஞ்சியில், 114 மி.மீ., கூடலுாரில், 98மி.மீ., , தேவாலாவில், 79மி.மீ., அப்பர் பவானி மற்றும் நடுவட்டத்தில், 70 மி.மீ., என, ஒரே நாளில், 541 மி.மீ., மழை பெய்தது. கடந்த இரு நாளில் மட்டும், 1,000 மி.மீ., மழை பெய்துள்ளது. மழையால், ஊட்டியில் குளிர் வாட்டுகிறது; பகல் நேரங்களில் கடுமையான பனி மூட்டம் நிலவுகிறது. இதனால் 'மிஸ்ட் லைட்' வெளிச்சத்துடன், அரசு பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் இயங்குகின்றன. கன மழையின் காரணமாக, ஊட்டி, கூடலுார், பந்தலுார் பகுதியில் உள்ள பள்ளி, கல்லுாரிகளுக்கு, மாவட்ட நிர்வாகம், நேற்று விடுமுறை அறிவித்தது. மழையால், மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும், பார்சன்ஸ் வேலி, பைக்காரா, கிளன்மார்கன், அவலாஞ்சி, அப்பர் பவானி உள்ளிட்ட அணைகள் நிரம்பி வருகின்றன; அணைகளில் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**<u>நாவல் பழம் வரத்து அதிகரிப்பு; விற்பனை குறைவால் விலை வீழ்ச்சிபழநி :</u>**

பழநிபகுதியில் நாவல் பழ வரத்து அதிகரித்துள்ள போதும், வெளியூர் விற்பனை பாதிப்பால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் காய்பிடித்து ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரை நாவல் பழ உதிர துவங்கும். பாலசமுத்திரம், கணக்கன்பட்டி, ஆயக்குடி, மஞ்சநாயக்கன்பட்டி உட்பட ஏராளமான பகுதிகளில் உள்ள, நாவல் மரங்களை ரூ.2000 முதல் 3000 வரை குத்தகைக்கு எடுத்துள்ளவர் கள் மொத்தமாக நாவல் பழங்களை ஆயக்குடி சந்தைக்கு கொண்டு வந்து வெளியூர் வியாபாரிகளுக்கு விற்கின்றனர். சென்ற வாரம் கூடை ரூ.200 க்கு விற்றது. தற்போது வெளியூர் வியாபாரிகள் வருகை குறைந்துள்ளதால், ஒரு கூடை ரூ.100 முதல் 120 வரை குறைத்து விற்கப்படுகிறது.சென்ற ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு மரங்களில் ஏராளமான நாவல் பழங்கள் காய்த்துள்ளன. துவக்கத்தில் விற்பனை களைகட்டியது. இந்தவாரம் வெளியூர் வியாபாரிகள் வருகை இல்லாததால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆயக்குடி வியாபாரிகள் கூறுகையில், ""நாவல் பழம் சீசன் காலத்தில் ஒரு நாளைக்கு ரூ.1000 முதல் 3000 வரை மொத்தமாக விற்பனை செய்கிறோம். ஆடி, ஆவணி முழுவதும் சீசன் என்பதால் சிறு வியாபாரிகள் கூடைகளில் பழங்களை மொத்தமாக வாங்கி, வெளியே ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.250 வரை விற்கின்றனர். வெளியூர் வியாபாரிகள் வருகை இல்லாத காரணத்தால், நாவல் பழங்களை குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

**<u>கோமாரி தடுப்பூசி முகாம் துவக்கம்</u>**

திண்டுக்கல் : கோமாரி நோய் தடுப்பூசி முகாமிற்கு தேவையான முன்னேற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமென உள்ளாட்சி அமைப்பினருக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி தடுப்பூசி முகாம் நேற்று துவங்கியது. இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் தங்கள் பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களில் உள்ள மாடுகளுக்கு தினமும் தடுப்பூசி செலுத்த

வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. செப்., 21 வரை நடைபெறும் முகாமில், கால்நடைத்துறையினருக்கு தேவையான ஒத்துழைப்பினை உள்ளாட்சி அமைப்பினர் செய்து கொடுக்க வேண்டுமென மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## <u>கால்நடை தீவனம் "அசோலா' செயல்முறை விளக்கம்</u>

தேனி: உத்தமபாளையம் ராயப்பன்பட்டி கிராமத்தில் குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள் ஒன்பதுபேர் அனாராஜ், ஆட்லின், மணிமாலா, தனலெட்சுமி, கிரீஷ்மா மது, பிரியங்கா, காவியா, வினிதா ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். ராயப்பன்பட்டியில் கால்நடைத் தீவனமாக அசோலா உபயோகிக்கும் முறை குறித்து டாக்டர் ஜெகநாதன் உதவியுடன் மாணவிகள் பத்து பேர் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். அசோலா வளர்க்கும் முறைகள், பராமரிப்பு, அதன் பயன்கள் இதோடு அசோலாவை, ஆடு, மாடு, கோழி, மற்றும் முயல்களுக்கு ஏற்ற ஊட்டசத்து நிறைந்த உணவாக பயன்படுத்தலாம், எனக் கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் ராஜ்மனோகரன்,வேளாண் அலுவலர் முருகேசன் மற்றும் சூசைமணி செய்திருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>விலையில்லா வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>

அரியலூர் ரெட்டிபாளையத்தில் விலையில்லா வெள்ளாடு களுக்கான குடற்புழு நீக்க முகாமை மாவட்ட வருவாய் அதிகாரி ரவீந்திரன் தொடங்கி வைத்தார்.

விலையில்லா வெள்ளாடுகள்

அரியலூர் மாவட்டம், ரெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி

வளாகத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் விலையில்லா வெள் ளாடுகள் மற்றும் செம்மறியா டுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 71 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 284 வெள்ளாடுகளுக்கான ஒட்டு மொத்த குடற்புழு நீக்க முகாம் நடைபெற்றது. இதில் வெள்ளாடுகள் மற்றும் செம் மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தை கொடுத்து முகாமை மாவட்ட வருவாய் அதிகாரி ரவீந்திரன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக முதல்- அமைச்சரால் அறிவிக் கப்பட்டு தொடங்கப் பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத் தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் 2011- 12-ல் 3 கிராம ஊராட்சிகளில் 150 பயனாளிகள், 2012-13-ல் 3 கிராம ஊராட்சிகளில் 150 பயனாளிகள், 2013-2014 -ல் 3 கிராம ஊராட்சிகளில் 150 பயனாளிகள் மற்றும் 2014-15-ல் ஜூலை 2014 வரை ஒரு கிராம ஊராட்சியில் 50 பயனா ளிகள் ஆக மொத்தம் 500 பயனாளிகளுக்கு 500 விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப் பட்டுள்ளது.

7,863 பயனாளிகள்

விலையில்லா வெள்ளாடு கள் செம்மறியாடுகள் வழங் கும் திட்டத்தின் கீழ் 2011-2012-ல் 30 கிராம ஊராட்சிகளில் 1,906 பயனாளிகளுக்கும், 2012 - 2013-ல் 42 கிராம ஊராட் சிகளில் 2,593 பயனாளி களுக்கும், 2013-2014-ல் 50 கிராம ஊராட்சிகளில் 2,770 பயனா ளிகளுக்கும் மற்றும் 2014- 2015 -ல் ஜூலை 2014 வரை 8 கிராம ஊராட்சிகளில் 594 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 130 கிராம ஊராட் சிகளில் 7,863 பயனாளிகளுக்கு 31,452 வெள்ளா டுகள் அரியலூர் மாவட் டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### குடற்புழு நீக்க முகாம்

இக்கால்நடைகளின் நலம் காக்க ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை அன்று முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 10 கிராம ஊராட்சிகளின் கறவைப் பசுக்களுக்கு இன விருத்தி நலம் முகாமும், நடைபெற்றுள்ளது.மேலும் 77 கிராம

ஊராட்சிகளை சேர்ந்த வெள்ளாடுகளுக்கு ஒட்டு மொத்த குடற்புழு நீக்கம் முகாம் நடக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். முகாமில் துரை.மணிவேல், எம்.எல்.ஏ., கால்நடை பராம ரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் செல்வ பெருமாள், உதவி இயக்குனர் பாஸ்கரன், ரெட்டிபாளை யம் ஊராட்சி மன்றத்தலைவர் ராமநாதன், வட்டாட்சியர் முருகன் மற்றும் கால்நடை பராம ரிப்புத்துறை மருத் துவர் ரங்கசாமி, பணியாளர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண் டனர்.

## <u>கடலூர் மாவட்டத்தில் தொடக்கம் 3½ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி</u>

ரெட்டிச்சாவடி, கடலூர் மாவட்டத்தில் 3½ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை அமைச்சர் எம்.சி.சம்பத் தொடங்கி வைத்தார்.

கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

கடலூர் மாவட்டம் முழுவதும் 3½ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளது. இதற்கான தொடக்க விழா கடலூர் அருகே பெரியகங்கணாங்குப்பத்தில் நடந்தது. விழாவுக்கு கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் எம்.சி.சம்பத் கலந்து கொண்டு கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பிரசார வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

200 கால்நடைகளுக்கு தடுப்பூசி

விழாவில் முதல் கட்டமாக 200 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. விழாவில் கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் சுகுமார், உதவி இயக்குனர்கள் கணேசன், ராமமூர்த்தி, ராகவன், பொன்னம்பலம், கால்நடை உதவி மருத்துவர்கள் முருகவேணி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜமாணிக்கம் , கால்நடை ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று மாவட்டம் முழுவதும் தொடங்கப்பட்டது.

இந்த முகாம் வருகிற 21-ந் தேதி நடைபெறுகிறது.

**<u>உடுமலை உழவர் சந்தையில் ஆகஸ்டு மாதம் ரூ.1½ கோடிக்கு காய்கறிகள் விற்பனை</u>**

உடுமலை உழவர் சந்தையில் ஆகஸ்டு மாதம் ரூ.1½ கோடிக்கு காய்கறிகள் விற்பனையானது.உழவர்சந்தை

உடுமலை கபூர்கான் வீதியில் உள்ள உழவர் சந்தையில் கடந்த ஆகஸ்டு மாதம் 5 லட்சத்து 92 ஆயிரத்து 205 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு வந்திருந்தது. 2, 196 விவசாயிகள் கொண்டு வந்திருந்த இந்த காய்கறிகள் மொத்தம் ரூ.1 கோடியே 50 லட்சத்து 31ஆயிரத்து 500–க்கு விற்பனையானது. இந்த காய்கறிகளை 84 ஆயிரத்து 77 நுகர்வோர் (பொது மக்கள்) வாங்கி பயனடைந்தனர். கடந்த ஜூலை மாதம் 2,162 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 5 லட்சத்து 54 ஆயிரத்து 615 கிலோ காய்கறிகள் ரூ.1 கோடியே 60 லட்சத்து 58 ஆயிரத்து 265–க்கு விற்பனையாகியிருந்தது. இதை 79 ஆயிரத்து 302 நுகர்வோர் வாங்கி பயனடைந்தனர். கடந்த ஆகஸ்ட் மாதத்தை விட ஜூலை மாதம் காய்கறிகளின் வரத்து குறைவாக இருந்தும் விற்பனை விலை அதிகமாக இருந்தது. ஜூலை மாதத்தை விட ஆகஸ்ட் மாதம் காய்கறிகளின் விலை கணிசமாக குறைந்திருந்ததால் விற்பனை தொகையும் குறைவானது.

<u>காய்கறி விலை</u>

உடுமலை உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி ரூ.6 முதல் ரூ.8 வரைக்கும், கத்தரிக்காய் ரூ. 16 முதல் ரூ.24 வரைக்கும், வெண்டைக்காய் ரூ.16 முதல் ரூ.20 வரைக்கும், அவரைக்காய் ரூ.30–க்கும், புடலங்காய் ரூ.16–க்கும், பீர்க்கங்காய் ரூ. 12 முதல் 15 வரைக்கும், சுரைக்காய் ரூ. 8 முதல் 10 வரைக்கும், பாகற்காய் ரூ.22 முதல் ரூ.24 வரைக்கும், பூசணிக்காய் ரூ.12–க்கும், சம்பாபச்சை மிளகாய் ரூ. 18 க்கும், குண்டு பச்சை மிளகாய் ரூ.24 முதல் ரூ.26 வரைக்கும் விற்பனையானது.

சின்ன வெங்காயம் ரூ.30 முதல் ரூ.34 வரைக்கும், பெரிய வெங்காயம் ரூ.26 முதல் ரூ.32 வரைக்கும், முருங்கைக்காய் ரூ.16 முதல் ரூ.18 வரைக்கும், உருளைகிழங்கு ரூ.38–க்கும், கேரட் ரூ.48 முதல் ரூ.50 வரைக்கும், பீட்ரூட் ரூ.12 முதல் ரூ.14 வரைக்கும்,முட்டைக்கோஸ் ரூ.16–க்கும், முள்ளங்கி ரூ.10 முதல் ரூ.12வரைக்கும், சாதா பீன்ஸ் ரூ.40–க்கும், புஸ்பீன்ஸ் ரூ. 50க்கும், பழைய இஞ்சி ரூ.100–க்கும், புதிய இஞ்சி ரூ.60–க்கும் விற்பனையானது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அதிக லாபம் தரும் கம்பு சாகுபடி தீவிரம்**

கள்ளக்குறிச்சி, : விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அடுத்த நீலமங்கலம் பகுதியில் பருவமழை பொய்த்து போனதால் நிலத்தடிநீர் மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால் விவசாயிகள் கடும் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த சில வாரங்களாக வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து விவசாயிகளுக்கு ஆறுதல் அளித்து வருகிறது. இதையடுத்து விவசாய பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதி விவசாயிகள் தற்போது கரும்பு, நெல், கம்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை அதிக அளவில் பயிர்செய்து வருகின்றனர். இதில் விவசாயிகள் கம்பு பயிர் செய்வதில் மட்டும் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். கம்பு அதிகமாக பராமரிப்பு செலவு இல்லை. மேலும் குறைந்த தண்ணீர் பயன்படுத்தி கம்பு கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் மூலம் அதிக லாபம் ஈட்டமுடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**<u>வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்தது ரூ.41 கோடி பெற விவசாயிகள் காத்திருப்பு</u>**

கோவை, : கோவை மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் இழப்பீடு தொகை கிடைக்காமல் ஏமாற்றமடைந்துள்ளனர். கோவை மாவட்டத்தில் 3.23 லட்சம் ஏக்டரில் விளை நிலம் இருக்கிறது.கடந்த ஆண்டில் 1.81 லட்சம் எக்டரில் விவசாய பயிர் சாகுபடி நடந்தது.ஆனைமலை,தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் 1,350 எக்டரில் நெல் பயிர் சாகுபடி நடந்தது. இதில் 10 சதவீத அளவிற்கு நெல் பயிர் பாதிக்கப்பட்டது.மாவட்ட அளவில் 88,500 எக்டரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் 45,486 எக்டரில் பயிரிடப்பட்டிருந்த 1.2 லட்சம் தென்னை மரங்கள் 30 முதல் 80 சதவீதம் வரை காய்ந்தது.சுமார் 25 ஆயிரம் தென்னை மரங்கள் சாய்ந்து விழும் நிலையில்இருந்தது.சுமார்20ஆயிரம் தென்னை விவசாயிகள் இழப்பீடுபெற தகுதி பெற்றிருந்தனர்.ஆனால்,வேளாண்ஆய்வில் 14,327 பேருக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. மீண்டும் ஆய்வு செய்த போது 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் தென்னை மரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. தக்காளி, சோளம், திராட்சை,மா,மஞ்சள்,கரும்பு,வாழை போன்ற பயிர் 7,921 எக்டரில் காய்ந்து போனது. இந்த விவரங்கள் தமிழக அரசின் வறட்சி நிவாரண குழுவின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கவேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். ஆனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டுமே முழு அளவில் வறட்சி பாதித்த விளை நிலங்களுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதிகபட்ச நிவாரண உதவியை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். தென்னை தவிர, இதர பயிர்களுக்கு கோவை மாவட்டத்தில் 5.81 கோடி ரூபாய் இழப்பீடு தொகை வழங்கப்பட்டது.

தென்னை விவசாயிகளுக்கு 41 கோடி ரூபாய் இழப்பீடு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. பட்ஜெட் கூட்ட தொடருக்கு பிறகு வறட்சி நிவாரண தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் பல முறை மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.பருவ மழை பெய்ததும், வறட்சி பாதிப்பை மாவட்ட நிர்வாகம் மறந்து விட்டது. சேலம், ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. தென்னை மரம் காய்ந்து போனால் அதனை வேருடன் அகற்ற 2 ஆயிரம் ரூபாய் செலவாகும். தமிழக அரசு குறைந்த பட்ச நிவாரண தொகை கூட வழங்காமல் இருப்பது ஏமாற்றமாக இருக்கிறது. மரத்தை அகற்றாமல் அந்த இடத்தில் வேறு பயிர் சாகுபடி செய்ய முடியாது என விவசாயிகள் புலம்

**திருச்செந்துறை வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம்**

திருச்சி,: திருச்செந் துறை ஒருங்கிணைந்த வணிக வளாகத்தில் நாளை வாழைத்தார் பொது ஏலம் நடைபெறு கிறது.திருச்சி வேளாண் விற் பனைகுழு சார்பில் ஸ்ரீரங் கம் திருச்செந்துறை யில் இயங்கி வரும் ஒருங்கி ணைந்த வாழை வணிக வளாகத்தில் நாளை (புதன்) காலை 11மணி முதல் 1மணி வரை வாழை த்தார்கள் பொது ஏலம் நடைபெற உள்ளது. இந்த பொது ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்த வித கமிஷனுமின்றி உட னுக்குடன் பணம் பட்டு வாடா செய்யப்படுகிறது.எனவே அந்தநல் லூர், மணிகண்டம், திருவெறும் பூர், லால்குடி, மண்ணச்ச நல்லூர், முசிறி, தொட்டி யம் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மற் றும் டெல்டா மாவட்ட விவசாயிகளும் அறுவடை செய்துள்ள வாழைத்தார் களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்திற்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் கலந்து கொள்ள லாம். என திருச்சி வேளாண் விற்பனை மற் றும் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சந்திரசேகரன் தெரிவித் துள்ளார்.

## துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி,: துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நாளை சின்ன வெங்காய மறைமுக ஏலம் நடை பெறுகிறது.திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளா ண் வணிகத்துறை சார்பில் துறை யூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை (புதன்) காலை 11 மணிக்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நடைபெற உள்ளது. எனவே துறையூர், உப்பிலியபுரம், தா. பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகு படி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக் குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் விவ சாயிகள் இதில் பங்கேற்று பயனடையலாம் என வேளாண் விற்பனை மற் றும் வேளாண் வணிகத் துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித் துள்ளார்.

## 3ம் தேதி கோட்டூரில் விதை உற்பத்தி பயிற்சி

மன்னார்குடி, : வேளாண்மை தரச்சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தரமான விதை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட உள்ளது. இது தொடர்பாக வேளாண் விதைச் சான்றுத் துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது; அரசின் வேளாண் துறைக்கு விதை உற்பத்தி செய்து தரும் விவசாயிகள் மற்றும் தனியார் உற்பத்தியாளர்களுக்கு விதைகள் உற்பத்தி செய்து தரும் விவசாயிகள் என இரு வகை களாக பிரித்து தரமான விதை உற்பத்தி செய்வது குறித்த பயிற்சி வகுப்பு 3ம் தேதி கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. கோட்டூர் வட்டாரத்தைச் சேர்ந்த 75 விவசாயிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் விதைகளின் வகைப்பாடு, தரம், விதை ஆய்வு, விதைச்சட்டம் மற்றும் சான்று பெற்ற விவசாயி

கள் விதை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் கடைபிடிக்கவேண்டிய தொழில் நுட்ப நடைமுறைகள் என்ன என்பது குறித்து பயிற்சி வழங்கப் படவுள்ளது. திருவாரூர் விதைச் சான்று உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம், தொழில் நுட்ப அலுவலர்கள் கோபி, செல்வநாயகம், ஜெயசீலன், ஆகியோர் பயிற்சியளிக்கின்றனர். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் வேளாண் துறையின் கோட்டூர் வட்டார விதைச் சான்று அலுவலர் சாமி நாதன் மற்றும் விதைச் சான்று அலுவலர்களை 9443492013, 9894941323 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>வரத்து குறைவு, விலை அதிகம் ஒரு வாழை தார் ஆயிரம் ரூபாய்</u>**

வத்தலக்குண்டு, : வத்தலக்குண்டுவில் ஒரு வாழைத் தார் விலை ரூபாய் ஆயிரத்தை தொட்டது. வத்தலக்குண்டு மொத்த வாழைக் காய் கமிஷன் மண்டியில் நேற்று வாழைத்தார் ஏலம் நடந்தது. வத்தலக்குண்டு பகுதியில் போதிய மழை இல்லாததால் வத்தலக்குண்டு பகுதியிலிருந்து 50க்கும் குறைவான நாட்டு வாழைத்தார்களே வந்தது. கரூர் பகுதியில் இருந்து ரஸ்தாளி வாழை தார்கள் ஏலத்திற்கு வந்தது. 120 முதல் 130 பழம் வரை உள்ள ரஸ்தாளி முதல்ரக ஒரு தார் ஆயிரத்தை தொட்டது. இரண்டாம் ரகம் ரூ.900 ஏலம் போனது. கால் மற்றும் வாய் பகுதியில் பாதிப்பு `கலப்பின மாடுகளை குறிவைத்து தாக்கும் ககிருஷ்ணகிரி, : கால் மற்றும் வாய் கோமாரி நோயால் கலப்பின மா டுகள் அதிகம் பாதிக்கப்படுவதாக தடுப்பூசி முகா மில் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.கிருஷ்ணகிரி அடுத்த சின்னமுத்தூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடைகளுக்கான இலவச கோ மாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. மாவட்ட கலெக்டர் ராஜேஷ் துவக்கி வைத் தார். அப்போது அவர் பேசியதாவது:கால்நடைகளுக்கு வரும் நோய்களை முன்கூட்டியே தடுக்கும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இலவச முகாம் துவங்கப் பட்டு மாவட்டத்தில் 3 லட் சத்து 65 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப் படவுள்ளது. ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசிப் பணி மேற்கொள்ள

பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள 108 தடுப்பூசிக்குழுவினர் மூலம் குளிர் சங்கிலி முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள அனைத்து பசுவினம் மற்றும் எருமையினங்களை கணக்கிட்டு, அனைத்திற்கும் தடுப்பூசி போடப்படவுள்ளது. இதன் மூலம் மாவட்டத்தில் 100 சதவீத தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படும். கால் மற்றும் வாய் கோமாரி நோயானது குறிப் பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்த முகாம் வரும் 21ம் தேதி வரை நடை பெறும். உங்கள் கிராமத்திற்கு தடுப் பூசி குழு வரும் நாட்கள் குறித்த விவரங்களை அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அறிந்துகொண்டு கால்நடை வளர்ப்போர் அனைவரும் முழுமையாக பயனடைய வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் கந்தசாமி, துணை இயக்குநர் டாக்டர் வேடியப்பன், உதவி மருத்துவர்கள் டாக்டர் பழனிச்சாமி, டாக் டர் திருமுருகன், டாக்டர் சண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன்சேகர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆசைத்தம்பி, சுண்டேகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் சக்திசங்கர், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜீ, பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் லட்சுமணன் உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

## <u>தென்னை மரங்களை அழிக்கும் வண்டுகளை ஒழிக்க வழி முறை</u>

உடுமலை, : தென்னை, பாக்கு மரங்களை அழிக்கும் வண்டுகளை ஒழிக்கும் வழி முறைகளை வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுகுறித்து உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தென்னை, பாக்கு மரங்களை சிவப்பு கூண் வண்டு, காண்டாமிருக வண்டு போன்றவை தாக்கி அழித்து வருகின்றன. இவற்றை இனக்கவர்ச்சிப் பொறிகள் உதவியால் எளிதில் அழிக்கலாம். `லூர்`எனப்படும் பொன்வண்டுகளின் உடலில் இருந்து வெளிவரும் ஒருவித ஹார்மோன் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு குப்பிகளில் தரப்படுகிறது. அதை வாங்கி

இனக்கவர்ச்சிப் பொறியில் வைக்க வேண்டும். அந்த ஹார்மோன் 3 மாதம் வரை காற்றில் கற்பூரம் போல கரைந்து ஒருவித வாசனையை வெளியிடும். அந்த வாசனையில் கவரப்படும் வண்டுகள் தானாக வந்து பொறியில் இருந்து வெளிவரும் வாசனையை நுகர்ந்து, பின்னர் வைக்கப்பட்டுள்ள பக்கெட்டில் உள்ள விஷத்தால் சாகும். இதன் மூலம் தென்னை, பாக்கு மரங்கள் காப்பாற்றப்பட்டு கூடுதல் மகசூல் பெறலாம்.பொதுவாக இளங்கன்றுகள் சாகுபடி செய்தவர்கள் முதல் உயரமான கன்றுகள் வைத்தவர்கள் வரை மரத்துக்கு பரிந்துரைபடி உரம் இடாமல் இருந்தாலோ, நீர் பாய்ச்சாமல் இருந்தாலோ மகசூல் குறையும். அந்த இடத்தில் கூட இத்தகைய வண்டுகள் 30 முதல் 80 சதவீதம் வரை மரத்தை தாக்கி கடும் சேதத்தை விளைவிக்கின்றன. எனவே இனக்கவர்ச்சிப் பொறியை விளக்குப் பொறியுடன் சேர்த்து நிரந்தரமாக வைத்து தென்னை, பாக்கு மரங்களை பாதுகாக்கலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## <u>நெல் சாகுபடியில் பச்சை வண்ண இலை அட்டை பயன்பாட்டால் தழைச்சத்து சேமிப்பு</u>

ஆலங்குடி, : நெல் சாகுபடியில் பச்சை வண்ண இலை அட்டையைப் பயன்படுத்தி தழைச்சத்தைச் சேமிக்கும் விதம் குறித்த பயிற்சி முகாம் புதுக் கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் அதன் தலைவர் ஞானமலர் தலைமையில் நடைபெற்றது. அப்போது உதவிப் பேராசிரியர் மாரிமுத்து பேசியதாவது:பயிருக்கு தழைச்சத்து தேவைப்படும் கால கட்டத்தில் பச்சை வண்ண அட்டை கொண்டு தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். இலையின் பச்சைநிறம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருந்தால், பயிரில் தேவையான தழைச்சத்து இருக்கிறது என்று பொருளாகும். அச்சமயம் மேலுரம் இடத் தேவையில்லை. நேரடி நெல் விதைப்பில் விதைத்த 21 நாட்களுக்கு இந்த இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி அளவுகள் எடுக்க வேண்டும்.குருவைப் பயிருக்கு 7 நாட்களுக்கு ஒரு முறையும் சம்பா நெற்

பயிர்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறையும் இலையின் பசுமையை கணக்கீடு செய்ய வேண்டும். பயிர் எண்ணிக்கை சரியாக உள்ள பகுதியில் நோய், பூச்சி தாக்காத நெற் குற்றுகளைத் தேர்வு செய்து இங்கொன்றும், அங்கொன்றுமாக உயரமான இளம் தளிர் முழுவதும் பிரிந்த, அதாவது நுனியில் இருந்து 3வது இலையை தேர்வு செய்து இலையை பறிக்காமல் இலையின் மையப் பகுதியில் பச்சை வண்ண அட்டையை வைத்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.வெள்ளை பொன்னி ரகத்துக்கு பச்சை வண்ண அட்டையில் உள்ள 3ம் எண்ணும் இதர ரகங்களுக்கு 4ம் எண்ணும் பொருந்தி இருத்தல் வேண்டும். மொத்தம் 10 இலைகளில் கணக்கீடு செய்யவேண்டும். இதில் 6 இலைகளில் பச்சை நிற அட்டையின் 4ம் எண்ணுக்கு கீழ் இருந்தால் குறுவை பயிருக்கு ஏக்கருக்கு 35 கிலோ யூரியாவும், சம்பா பயிருக்கு 26 கிலோவும் ஒவ்வொரு முறையும் இடவேண்டும். இந்த இலை வண்ண அட்டையின் விலையானது ரூ. 50 மட்டுமே.ஒவ்வொரு முறையும் காலை 8 முதல் 10 மணிக்கு உள்ளும் மாலை 4 மணி முதல் 5 மணிக்கு உள்ளும் கூடுமான வரை ஒரே நபர் இலை வண்ண அளவை பயிரின் வளர்ச்சிப் பருவம் முழுவதும் கணக்கீடு செய் வது சிறந்தது. மேலும் கணக் கீடு செய்யும் போது, சூரியன் அளவு எடுப்பவருக்குப் பின்னாலும், அளவு எடுக்கப்படும் இலையை மறைத்தவாறு இருக்க வேண்டும். பச்சை வண்ண அட்டையை பயன்படுத்துவதால் ஏக்கருக்கு 2 ஆயி ரத்து 530 கிலோ தழைச்சத்தை சேமிக்கலாம். இதனால் சாகுபடி செலவு குறைவதோடு மண்வள மும், சுற்றுச்சூழல் மாசுபடாமல் பாதுகாக்கப்படுகிறது.எனவே, பரிந்துரைக்கப்பட்ட உரமான சூப்பர் பாஸ்பேட்டை ஏக்கருக்கு 125 கிலோ அடியுரமாகவும் 25 கிலோ பொட்டாஷ் உரத்தை 3 முறை பிரித்து நேரடி நெல் விதைப்பிற்கு இட வேண்டும் என்றார். உதவிப் பேராசிரியர் கதிரவன், நேரடி நெல் விதைக்கும் கருவியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்படுத்தும் வழிமுறை ஆகியன விளக்கிக் கூறியதுடன் செயல் விளக்கம் அளித்தார்.இந்த செயல் விளக்க நிகழ்ச்சியில், உதவிப் பேராசிரியர்கள்

மதியழகன், கீதா ஆகியோர்களுடன் ஆராய்ச்சியாளர் விஜய்சங்கர் மற்றும் விவசாயிகள், பண்ணை மகளிர் திரளாகப் பங்கேற்றனர்.முன்னதாக, உதவிப் பேராசிரியர் கதிரவன் வரவேற்றார். முடிவில் ஆராய்ச்சியாளர் பாண்டித்துரை நன்றி கூறினார்.

## <u>விவசாயிகளுக்கு விதை, உபகரணங்கள் குறித்து துண்டு பிரசுரம் வழங்க வேண்டும்எம்எல்ஏ அறிவுறுத்தல்</u>

சீர்காழி, : விவசாயிகளுக்கு வேளாண்மை அலுவலகத்தில் வழங்கப்படும் விதைகள் உபகரணங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்க வேண்டும் என்று எம்எல்ஏ சக்தி கூறினார். சீர்காழி அருகே காளிகாவல்புரத்தில் வேளாண்மை துறை சார்பில் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் விஜயகுமார் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் சந்திரசேகரன், ஒன்றியக் குழுத்தலைவர் பாரதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் வெற்றிவேலன் வரவேற்றார். சீர்காழி எம்எல்ஏ சக்தி விவசாயிகளுக்கு மானிய விலையிலான விதைகள், உபகரணங்கள் வழங்கி பேசுகையில்,தமிழக அரசு விவசாயிகள் நலன் கருதி 50 சதவீத மானியத்தில் விதைநெல், மற்றும் முழு மானியத்தில் தண்ணீர் எடுத்து செல்லும் பைப், களை எடுக்கும் இயந்திரம், நடவு இயந்திரம், 10 சதவீத மானியத்தில் ஆயில் என்ஜின்கள் வழங்கி வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வேளாண்மை அலுவலகங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகள் இயந்திரங்கள் குறித்து துண்டு பிரசுரங்கள் அச்சடித்து அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்றார். விழாவில் முன்னாள் எம்எல்ஏக்கள் பூராசாமி, மூர்த்தி, பேரூர் கழக செயலாளர் போகர்ரவி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர்கள் ரவிச்சந்திரன், திருமாறன், முத்து, அஞ்சம்மாள், கவுன்சிலர்கள்

பாண்டியன், வனஜா, உஷா, வேளாண்மை அலுவலர் எழில்ராஜ், துணை வேளாண்மை அலுவலர்கள் பன்னீர்செல்வம், சிவபெருமாள், அசோகன், ஆத்மா திட்ட வட்டார தொழில் நுட்ப வல்லுநர்கள் பார்கவி, ராஜசேகர், மாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மக்காச்சோளம், பருத்தி கொள்முதல் நிலையங்கள்**

திட்டக்குடி, : மங்களூர் ஒன்றியத்தில் மங்களூர், கீழகல்பூண்டி பகுதிகளில் மக்காச்சோளம், பருத்தி கொள்முதல் நிலையம் திறக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.மங்களூர் ஒன்றியத்தில் மக்காச்சோளம் 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும், பருத்தி 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. சோளம் பயிரிடுவதற்கு, ஏக்கர் ஒன்றுக்கு விதைப்பு கூலி, களை எடுத்தல், அறுவடை, உரமிடுதல் என சாகுபடி செய்வதற்கான செலவு ரூ. 10 ஆயிரம் ஆகிறது. தற்போது மக்காச்சோளம் மற்றும் பருத்தி அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மக்காச்சோளம் அறுவடை இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்ய ஏக்கர் ஒன்றுக்கு ரூ 2 ஆயிரத்து 400 செலவாகிறது. இவ்வாறு அறுவடை செய்யும் சோளத்தை தனியார் வியாபாரிகள் கிராமத்தில் முகாமிட்டு கொள்முதல் செய்கின்றனர். விவசாயிகளின் அறியாமை பயன்படுத்தி மூட்டை ஒன்றுக்கு 5 கிலோ முதல் 7 கிலோ வரை கூடுதல் எடை, வைத்து ஏமாற்றுவதுடன் சந்தை மதிப்பைவிட குறைந்த விலைக்கு வாங்கி செல்கின்றனர்.இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைகின்றனர். எடை, விலை ஆகியவற்றில் விவசாயிகளை ஏமாற்றி கொள்ளை வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். அதேபோல் பருத்தி விவசாயம் செய்த விவசாயிகளுக்கு பருத்தி அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல், பஞ்சுகளை அறுவடை செய்யாமல் நிலத்திலே வைத்துள்ளனர். இதனை சாதகமாக பயன்படுத்தி கொள்ளும் மர்ம நபர்கள் இரவு வேளைகளில் சிறிய டார்ச் லைட் உதவியுடன் செடிகளில் உள்ள பஞ்சுகளை

அறுவடை செய்து மினி லாரிகளில் திருடி சென்று சேலம் ஆத்தூர் பகுதிகளில், விற்றுவிடுகின்றனர். இந்த தடைகளையெல்லாம், மீறி விவசாயிகள் விளைந்த பருத்தியை அறுவடை செய்து சேலம், ஆத்தூர் பகுதிக்கு விற்பனைக்கு கொண்டு சென்றால், அங்கு வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலையில் பருத்தி சோளம் ஆகியவற்றை கொள்முதல் செய்கின்றனர். பருவ மழை பெய்யாதது, ஆட்கள் பற்றாக்குறை, திருட்டு என பல்வேறு இன்னல்களை சந்திக்கும் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காமல், பாதிக்கப்படுகின்றனர். இதே நிலை நீடித்தால் சோளம், பருத்தி சாகுபடி செய்யும் பரப்பளவு வெகுவாக குறையும் நிலை ஏற்படும். எனவே மங்களூர் வட்டாரத்தில், பருத்தி மற்றும் மக்காசோளம் கொள்முதல் நிலையத்தை திறக்க மாவட்ட கலெக்டர் உத்தரவிட வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**<u>தலைநகர் டெல்லி போகும் ஊத்தங்கரை தேங்காய்கள்</u>**

ஊத்தங்கரை, : கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் கொள்முதல் செய்யப்படும் தேங்காய்களுக்கு வெளி மாநிலங்களில் நல்ல மவுசு உள்ளது. குறிப்பாக தலைநகரான டெல்லிக்கு அதிகளவில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டம் தென்னை, மா மற்றும் பருத்தி, கரும்பு உள்ளிட்ட பல பயிர்களுக்கும் பெயர் பெற்றதாகும். மா மற்றும் தேங்காய்கள் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் அதிகளவில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. ஏற்றுமதி தரம் வாய்ந்த மாம்பழங்கள் வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. பருவ மழை நல்லமுறையில் பெய்து கிடைக்கும் தேங்காய் மகசூல் என்பது இப்போதைய கால கட்டங்களில் கேள்விகுறியாகி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே பருவ மழை பொய்த்து வருகிறது. மா மற்றும் தென்னை கருகி வரும் நிலை ஏற்பட்டு வருகிறது. 20 வருடங்களாக வளர்த்து வந்த தென்னை கண்முன்னே கருகுவதை பொறுக்க முடியாமல் விவசாயிகள் தவிப்பிற்குள்ளாகியுள்ளனர். ஊத்தங்கரை,

போச்சம்பள்ளி, காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, சிங்காரப்பேட்டை, செங்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் தேங்காய்கள் தர வாரியாக பிரித்து ஊத்தங்கரை யிலிருந்து தினசரி ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, உபி, கர்நாடகா, டெல்லி உள்ளிட்ட பல்வேறு வட மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. போதிய பருவ மழை பெய்யாததால் தேங்காய் வரத்து குறைந்ததால் கொள்முதல் விலை தேங்காய் ஒன்றுக்கு தி8ல் இருந்து தி9 வரை கிடைக்கிறது. இப்பகுதி தேங்காய்களில் பருப்பு நன்றாக இருப்பதாலும், தரமானதாகவும், சுவை மிகுந்ததாகவும் இருப்பதால் நல்ல விலை கிடைப்பதாக மண்டி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து ஜாபர் என்பவர் கூறியதாவது:ஊத்தங்கரை பகுதியில் போதிய மழை இல்லாததால் தென்னை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தேங்காய் வரத்து குறைந்துள்ளதால் கொள்முதல் செய்யப்படும் தேங்காய் தி8ல் இருந்து தி9 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஊத்தங்கரை யிலிருந்து தினசரி குறைந்தபட்சம் 50 ஆயிரம் தேங்காய் வரை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.ஊத்தங்கரை, செங்கம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, போச்சம்பள்ளி, அகரம், காரிமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்யப்படும் தேங்காய்களை ஊத்தங்கரைக்கு மொத்தமாக கொண்டு வந்து தரம் பிரிக்கப்படுகிறது. பின்னர் இங்கிருந்து டெல்லி, ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா, உ.பி. உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு தினசரி 21 டன் வரை அனுப்பி வைக்கப்படுகிறது. மட்டையுடன் கொள்முதல் செய்யப்படும் தேங்காய்கள் உரிக்கப்பட்டு தர வாரியாக மூட்டை கட்டப்படுகிறது. உரிக்கப்பட்ட தென்னை மட்டைகள் பர்கூர் பகுதியில் உள்ள நார் தொழிற்சாலை களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மட்டை மட்டுமே தினசரி 7 டன் வரை விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## திருமண சீசன் துவக்கம் ஆரஞ்சு விலை உயர்வு

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி பகுதியில் போதிய மழை இல்லாததால் காய்கறி விளைச்சல் சரிந்தது. இதனால், கடந்த சில மாதங்களாக வரத்து குறைந்ததால் சந்தையில் கிடு கிடுவென விலை உயர்ந்தது. இதையடுத்து, சொட்டுநீர் பாசனத்தில் விவசாயிகள் சாகுபடியை முடுக்கி விட்டனர். இதனால், குறுகிய கால சாகுபடி வயது கொண்ட வெண்டை, கத்தரிக்காய், புடலங்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலை சரிந்துள்ளது. இந்நிலையில், கடந்த வாரம் தள்ளுவண்டி களில் கிலோ தி20க்கு கூவி கூவி விற்பனை செய்யப்பட்ட ஆரஞ்சு பழத்தின் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. தேவை அதிகரித்துள்ளதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:தற்போது போச்சம்பள்ளி பகுதியில் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் களை கட்டியுள்ளது. திருமணத்திற்கு வந்து மணமக்களை வாழ்த்தி விட்டு செல்பவர்களுக்கு தாம்பூழத்திற்கு தேங்காய் கொடுப்பது வழக்கம். தற்போது, தேங்காயும் விலை உயர்ந்துள்ளதால் ஆரஞ்சு பழத்தை திருமண தாம்பூழத்தில் வழங்கி வருகின்றனர். இதற்காக அதிகளவில் வாங்கிச் செல்வதால் தி20க்கு விற்ற ஆரஞ்சு பழம் தற்போது தி40 ஆக விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

## துவரை சாகுபடி செய்து அதிக லாபம் பெறுவது எப்படி? வேளாண் அலுவலர் ஆலோசனை

பெரம்பலூர், : துவரையை தனிப்பயிராக நடவுசெய்து அதிக லாபம்பெற லாம். பருத்தி, கடலையில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யலாமென பெரம்பலூர் வட் டார வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் சேகர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது : தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் வட்டார விவசாயிகளுக்கு துவரை சாகுபடி செய்து அதிகப்படியான லாபம்பெற வாய்ப்புள்ளது. இதற்காக ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களது நிலத்தை நன்றாக பண்படும் அளவுக்கு உழவு செய்து, பாத்திகள் அமைக்கவேண்டும். அங்கக உரமான தொழு உரத்தை ஏக்க ருக்கு 5 டன் அல்லது 2.5 டன் தென்னை நார்கழிவு அல்லது ஆலை கழிவை அடியுரமாக இடவேண்டும்.

பயிரிடுவதற்கு முன்னதாக மண்பரிசோதனை செய்துகொண்டு, அதற்கேற்ப பரிந்துரையின் அடிப்படையில் உரமிடவேண்டும். இதனால் உரச்செலவு குறைந்து கூடுதல் லாபம் பெறமுடியும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகமான அங்கக உரம், நுண்ணுயிர் உரம், இரசாயன உரம், நுண்ணூட்டம் ஆகியவற்றை சரியான அளவில், சரியான நேரத்தில் இடவேண்டும். தழைச்சத்தும் மணிச்சத்தும் மட்டுமே இறவைப் பயிருக்கு பரிந்துரை செய்யப்பட்டு வந்தது.சாம்பல் சத்தும் இடுவதால் உற்பத்தித்திறன் அதிகமாகிறது என்பது கண்டறியப் பட்டது. களைகள் முளைப்பதற்கு முன் அவற்றைக் கட்டுப்படுத்த பெண்டிமித்தலின் ஏக்கருக்கு 800 மில்லி அல்லது புளுகுளோரலின் 600 மில்லியை 20 கிலோ மணலுடன் கலந்து, விதைத்த, நடவு செய்த பிறகு தெளிக்கவேண்டும். பிறகு 35 நாள் கழித்து ஒரு நாள் கைகளால் களையெடுக்க வேண்டும். பயிரைத் தாக்கும் பூச்சிநோய் தாக்குத லுக்கு ஏற்றபடி பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.பெரம்பலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இரண்டரை ஏக்கருக்கு 1 ஹெக்டருக்கு ரூ. 7,500 மதிப்பில் இடு பொருட்களான துவரை, பூச்சி, நோய் மருந்துகள், உரங்கள், மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. பெரம்பலூர் வட்டார விவசாயிகள் துவரை சாகுபடியை தனிப்பயிராக நடவு செய்துகூட அதிகப் படியான மகசூலையும், லாபத்தையும் பெறலாம். அல்லது பருத்தி, கடலை, எள் போன்ற பயிர்களில் ஊடுபயிராக சாகுபடி செய்தும் பயன் பெறலாம். இதுதொடர்பான மேலும் விபரங்களை அறிந்துகொள்ள விவசாயிகள் தங்கள்

பகுதிக்கான உதவி வேளாண்மை அலுவலர்களையோ, வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தையோ தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி,: திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை (புதன்) காலை 11 மணிக்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நடைபெற உள்ளது. எனவே துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்ப டுவதால் விவசா யிகள் இதில் பங்கேற்று பயன டையலாம் என வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

பாபநாசம், : பாபநாசம் ஒன்றியம் கபிஸ்தலம் அடுத்த உமையாள்புரத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று நடந்தது முகாமை ஊராட்சி தலைவர் முருகேசன் துவக்கி வைத்தார். முகாமில் 300 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஒன்றிய கவுன்சிலர் வீரையன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் முகமது உதுமான், கபிஸ்தலம் கால்நடை உதவி மருத்துவர் வடிவேலன், உதவியாளர் சாந்தி, ஒன்றிய கண்காணிப்பாளர் இளங்கோ கலந்து கொண்டனர்.

**<u>வைகை அணையில் இருந்து பாசனத்துக்கு விரைவில் தண்ணீர் திறக்க வாய்ப்பு அரசுக்கு பரிந்துரை</u>**

மதுரை, : பெரியாறு அணை ஒதுக்கீட்டு தண்ணீர் இருப்பு 6 ஆயிரம் மில்லியன் கன அடியை தாண்டியது. எனவே விரைவில் வைகை அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.முல்லை பெரியாறு அணை ஆயக்கட்டு நிலங்கள் பெரும்பகுதி மதுரை மாவட்டத்தில் தான் உள்ளன. இருபோக ஆயக்கட்டு மதுரை மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர், திண்டுக்கல் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் உள்ளது. ஒருபோக ஆயக்கட்டு மதுரை மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கர் உள்ளது. கடந்த 2012ல் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் இரு போகமும் விளையாமல் ஒன்றரை லட்சம் ஏக்கர் தரிசானது. 2013ல் இரு போக ஆயக்கட்டில் முதல் போகம் மட்டும் விளைந்தது. தொடர்ந்து 2 ஆண்டு விளைச்சல் இல்லை. இந்த ஆண்டும் முதல் போக பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. பேரணை முதல் கள்ளந்திரி மதகு வரை 45 ஆயிரம் ஏக்கர் இரு போக சாகுபடியில் முதல் போகத்திற்கு கடந்த ஜூனில் திறக்க வேண்டிய தண்ணீர் இதுவரை திறக்கப்படவில்லை. முல்லை பெரியாறு அணை ஒதுக்கீட்டு நீர் 4,000 மில்லியன் கன அடிக்கு மேல் இருந்தால், கள்ளந்திரி வரையிலான 45 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கலாம். 6 ஆயிரம் மில்லியன் கன அடியை தாண்டினால் மதுரை மாவட்டம் மேலூர் பகுதியிலுள்ள ஒருபோகம் சேர்த்து மொத்தம் ஒன்றரை லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கலாம் என்பது விதிமுறையாகும். நேற்று காலை நிலவரப்படி பெரியாறு அணை நீர் மட்டம் 128.20 அடி. நீர் வரத்து 4 ஆயிரத்து 253 கன அடியாக அதிகரித்தது. மாலையில் நீர் மட்டம் 129 அடியை தாண்டியது. பெரியாறு, வைகை அணைகளில் மொத்தம் 6,525 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. இதில் சுமார் 400 மில்லியன் கன அடி வைகை ஒதுக்கீட்டு நீராகும். எனவே பெரியாறு ஒதுக்கீட்டு நீர் 6,125 மில்லியன் கன அடி இருப்பு

உள்ளது.இதனால் உடனே தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் வற்புறுத்தி வருகின்றனர். வரும் 15ம் தேதி வரை காத்திருந்து மழையை எதிர்பார்த்து இருபோக மற்றும் ஒருபோக ஆயக்கட்டு சேர்த்து ஒன்றரை லட்சம் ஏக்கருக்கும் ஒரே நேரத்தில் தண்ணீர் திறக்கலாமா? 45 ஆயிரம் ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் திறக்கலாமா என்பது குறித்தும் பொதுப்பணித்துறையினர் தீவிரமாக பரிசீலித்து வருகின்றனர். இதுகுறித்து பொதுப்பணித்துறை பொறியாளர் ஒருவர் கூறும்போது, 'பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தண்ணீர் இருப்பு மற்றும் கண்மாய்கள் நிலவரம் குறித்தும் எழுதி உள்ளோம். விரைவில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. அரசு முடிவு எடுத்து அறிவிக்கும்' என்றார்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

திருமங்கலம், : டி.கல்லுப்பட்டி ஒன்றிய பகுதியில் நடந்த கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாமில் 500க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி போடப் பட்டது. டி.கல்லுப்பட்டி ஒன்றிய பகுதிகளில் உள்ள காரைகேணி, சாலிச்சந்தை, கீழப்பட்டி, சிலார்பட்டி ஆகிய கிராமங்களில் நேற்று கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாம் நடந்தது. கால்நடை மருத்துவர்கள் காளீஸ்வரன், காளிராஜன், கற்பகவள்ளி, மற்றும் ஆண்டிசாமி அடங்கிய குழுவினர் 500க்கும் மேற்பட்ட பசுக்கள் மற்றும் எருமை மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர். நேற்று துவங்கிய இந்த முகாம் வரும் 21ம் தேதி வரை நடைபெறும். இதில் கால்நடை வளர்ப்போர் தவறாமல் தங்களது மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டுமென கால்நடைத் துறையினர் கேட்டு கொண்டுள்ளனர்.